**சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (''நிறுவகம்'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் | இந்த வகைப்படுத்தல் பிழைகள் அனைத்தும் சீர்செய்யப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளின் போது ஒத்த தன்மையின் அல்லது செயற்பாட்டின் சொத்துக்கள் தொகுக்கப்படாமல் ரூபா 2,232,364 தொகையான கணனி மற்றும் உபபாகங்கள், கட்டிடம் மற்றும் மேம்பாடுகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் இயந்திரங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 524,029 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | | நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 24,866,889 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மேற்படி மதிப்பிடப்பட்ட தவறை சீர்செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டை இறுதி செய்த பின்னர் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துகளின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் திறைசேரியிடமிருந்து நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட ரூபா 1,500,000 மூலதன மானியங்கள் காலக்கழிவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆதார ஆவணங்களை கண்டறிந்து மானியத்தை காலக்கழிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மானியத்தை காலக்கழிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் பராமரிப்புப் பிரிவின் கட்டிடம் இடிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் கிரயம் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட வேண்டிய பொருட்களின் தொகையை கண்டறிய முடியவில்லை. | கிரயம் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரித்த பின்னர் வேறுபாடு இணக்கம் | வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | விளையாட்டுப் பொருட்களின் கிரயம் ரூபா 1,940,681 ஆக காணப்பட்ட போதிலும் அத் திகதியில் நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் கிரயம் ரூபா 629,699 ஆக இருந்தது. ரூபா 1,310,982 வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் கிரயம் ரூபா 6,507,291 ஆக காணப்பட்ட போதிலும் சேர்த்தல் பதிவேட்டின் (accession register) பிரகாரம் கிரயம் ரூபா 9,811,895 ஆக காணப்பட்டது. ரூபா 3,249,988 வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 சனவரி 01 முதல் முன்கொண்டு வரப்பட்ட ரூபா 74,380,017 கட்டிடக் கிரயத்தின் தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கட்டிட மீதிக்கான பிரித்தெடுப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. | உரிய ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 2,128,637 பிணைமுறி 08 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து பல்கலைக்கழகம் அறவிடும். | பெறவேண்டிய பிணைமுறியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 464,891 தொகையான 03 உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக உள்ள கடன் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் 2021 திசெம்பர் 31 அளவில் அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் 02 முதல் 09 ஆண்டுகள் வரையான காலமாக நிலுவையாக காணப்பட்டன. | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கும் மேலாக எஞ்சியிருந்த ரூபா 724,975 பிடித்துவைத்தல் பணம் தொடர்பாக தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டவுடன் இது சீர்செய்யப்படும். | நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதங்கள் | அனைத்து பதவியணியினரும் தமது வருகையை கைவிரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினர் அத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | கல்விசார் பதவியணியினர் தமது வருகை/ புறப்படுதலை கைவிரல் அடையாளமிடும் இயந்திரத்தில் பதிவு செய்வதில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கை 2022 மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை கணக்காய்விற்கு 2022 யூலை 25 வரையிலும் | பொருள் மெய்மையாய்வு 2021 ஐ இறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,169,824 தொகையான மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,489,736 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,319,912 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு எதிராக ஆளணி வேதனங்கள் தொடர்பான செலவினம் 8 சதவீதத்தால் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 முக்கிய செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான ஆளணி வேதனங்கள் போன்ற பல்கலைக்கழகத்தின் செலவினம் ரூபா 16,879,507 ஆல் மற்றும் 8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கல்விசார் பதவியணியினரிற்கான நெறிமுறைகள் மற்றும் கல்விப் பொறுப்புக்கூறலின் பிரகாரம் தலைவர், தலைமை பேராசிரியர், பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர், பயிற்றுவிப்பாளர் தரம் I மற்றும் பயிற்றுவிப்பாளர் தரம் II ஆகியோரால் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்ச மாணவர் தொடர்பு நேரம் தனிப்பட்ட நேர அட்டவணையில் முறையே 180, 380, 450 மற்றும் 510 மணிநேரங்கள் என பிரதிபலிக்க வேண்டும். கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் சராசரியாக 56 சதவீத பணி விதிமுறைகள் மாத்திரமே மாணவர் கற்பித்தலிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதே நேரம் ஆராய்ச்சியில் பங்கேற்று மேற்பார்வை செய்வதற்கும், மாணவர்களை செயன்முறை அமர்வுகளிற்கு தயார்படுத்தி | ஆராய்ச்சியில் பங்கேற்று மேற்பார்வை செய்வதற்கும், மாணவர்களின் உட்புற மற்றும் வெளிப்புற அழகியல் நிகழ்வுகளுக்கு தயார்படுத்தி வழிகாட்டுவதற்கும் செலவிடப்பட்ட மாணவர் தொடர்பு நேரம் மற்றும் செயன்முறை அமர்வுகள் தொடர்பான கருத்தியல் நேரங்கள் ஆகியவை பணி விதிமுறைகளைக் கணக்கிடும்போது கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மொத்த மாணவர் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் பதவியணியினரின் மொத்த பணிச்சுமை ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் பணி விதிமுறைகளின் அடிப்படையில் வழிகாட்டலொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டுவதற்குமான பணி விதிமுறை ஒதுக்கீடு தனிப்பட்ட நேர அட்டவணையில் பிரதிபலிப்பதை நிரூபிக்கும் பதிவுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 செப்தெம்பர் 03 இல் கட்புல தொழில்நுட்பக் கலைத் துறையில் நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு கற்கைகளில் தகுதிகாண் காலத்தின் கீழ் விரிவுரையாளர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், 2019 செப்தெம்பர் 04 முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை கட்புல தொழில்நுட்பக் கலைத் துறையில் மேற்படி பாடம் காணப்படாததால் குறிப்பிட்ட விரிவுரையாளருக்கு பணிச்சுமை ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான காலப்பகுதியில் விரிவுரையாளரிடமிருந்து எவ்வித சேவையும் பெறப்படாமல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 5,087,571 தொகை செலுத்தப்பட்டது. | EUSL இன் கலை மற்றும் கலாச்சார பீடத்தில் அவரது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. | சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நிறுவகத்தின் தற்போதைய பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தொழில் சந்தை மற்றும் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டும், மேலும் பாடத்திட்டத்தில் தொழில்நுட்ப பாடங்கள் மற்றும் மொழித் திறன்கள் ஆகியவை எப்போதும் மாறிவரும் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு உள்ளடக்கப்பட வேண்டும். எனினும் இசை, நடனம், நாடகம் & அரங்கியல் மற்றும் கட்புல & தொழில்நுட்ப கலைகளில் நுண்கலைமானிக்கான திருத்தப்பட்ட பாடத்திட்டம் 2022 யூலை 25 வரையிலும் மூதவையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் பாடத்திட்டம் திருத்தப்பட்டு மூதவையின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது. | திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 நிதிகளின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ஒன்லைன் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டிற்காக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ரூபா 10,000,000 நிதியானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சந்தையில் விலை உயர்வு காரணமாக, குறைந்த கேள்விதாரர் பொருட்களை வழங்குவதற்கு இணங்கியிருக்காததுடன் ரூபா 10 மில்லியனுக்கு மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. | இந்த நிதியேற்பாட்டை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஐந்து இலக்குகளின் கீழ் 76 செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும் 41 சதவீத நடவடிக்கைகளின் சராசரி முன்னேற்றம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிறுவகம் முழுவதும் முகாமைத்துவ தகவல் முறைமையை உருவாக்குதல், ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல், கற்பித்தல் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல், கேட்போர் கூடத்தை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் போன்ற செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் 30 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தன. | கொவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை எதிர்பார்த்த அளவுக்கு பூர்த்தி செய்ய முடியவில்லை. | கால எல்லைக்குள் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் 2030 பற்றி நிறுவகம் அறிந்திருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான மைல்கற்கள் மற்றும் நிறுவகத்திற்குப் பயன்படுத்தப்படக்கூடிய குறிக்கோள்கள் மற்றும் அந்த இலக்குகளின் அடைந்துகொள்ளல்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |